

தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் நேற்று (03.03.2025) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்ட சட்டம் தொடர்பான விளக்க கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம். சிந்தனைச்செல்வன், ஆ.கிருஷ்ணசாமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி கூலட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த ஆனந்த், நிதித் துறை சிறப்புச் செயலாளர் அருண் சுந்தர் தயாளன், பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் ச. அண்ணாதுரை மற்றும் இதர துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றியத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பி.ஆர் பள்ளி ஊராட்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணன் ஏற்பாட்டில், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ், சந்திரன், கழகக் கொடியேற்றி அறுசுவை உணவு வழங்கி துப்புரவு பணியாளருக்கு காய்கறிகள் மளிகை பொருள்கள், பெண்களுக்கு புடவை பெரியோர்களுக்கு வேஷ்டி பள்ளி மாணவ மாணவிகளுக்கு சில்வர் தட்டு நோட் புத்தகங்கள் வழங்கினார் உடன் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இ. கே.உதயசூரியன், ஒன்றிய நிர்வாகிகள் அகூர் மாணிக்கம், நரசிம்மராஜி, சுசிலா சுப்பிரமணி, வேலாயுதம், டில்லி பாபு, வி.கோதண்டம், ஹரிபாபு, குப்புசாமி, சீனிவாசன், பூபாலன், மணி, குமரவேல், ராஜேந்திரன், ரஜினி, கேசவன், பாலாஜி, உள்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.

### ஆற்காடு நகரில் மாவட்ட மருத்துவ அணி சார்பில்

# கழகத் தலைவர் பிறந்த நாளையொட்டி இரத்த தான முகாம்!

## அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பங்கேற்றார்! ஜெ.எல்.ஈஸ்வரப்பன் – ஏ.கே.சுந்தரமூர்த்தி – டாக்டர் பி.என்.எஸ்.சரவணன் – ஏ.வி.சரவணன் முன்னிலை!

இராணிப்பேட்டை, மார்ச், 4-

இராணிப்பேட்டை மாவட்ட திமுக மருத்துவ அணி மற்றும் ஆற்காடு நகர திமுக சார்பில் நடைபெற்ற மாபெரும் இரத்த தான முகாம் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இதில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத்தலைவர் ஏ. கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர். பி.என்.எஸ்.சரவணன், நகர கழக செயலாளர் ஏ.வி.சரவணன், மருத்துவ அணி துணை தலைவர் டாக்டர். சுப்பிரமணி, மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர்கள் டாக்டர். தாமரை கண்ணன், டாக்டர். விமல் பிரபாகரன், டாக்டர். கே. ஜி.கிருஷ்ணமூர்த்தி, நகர அவைத்தலைவர் பி.என். எஸ். ராஜசேகரன், பொன். ராஜசேகர், துணைச் செயலாளர் ருக்மணி, மாவட்ட பிரதிநிதி ஏ.ஜி.லிங்கேஷ், ஏ.சிவா, ஆற்காடு நகர மன்ற துணை தலைவர் டாக்டர். பவளக்கொடி சரவணன், திமிரி ஒன்றிய குழு தலைவர் அசோக், துணை தலைவர் ரமேஷ், ஆற்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.வி.பாண்டுரங்கன், விளாப்பாக்கம் பேரூர் கழக செயலாளர் பி.கே.பாபு, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் காந்திமதி பாண்டுரங்கன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆனந்த், விஜயகுமார், மாவட்ட சிறுபான்மை பிரிவு ரியாஸ்பாஷா, நகர இளைஞரணி அமைப்பாளர் செல்வம், நகர ஆதிதிராவிடர் நலக்குழு சசிகுமார், முன்னா, குணா, நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நித்யானந்தம், கிஷோர், குகன், சதீஷ், மற்றும் தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர். ஏ.பிரசாந்த் நன்றி தெரிவித்தார், மற்றும் நகர கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

# திண்டிவனத்தில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் - பொதுமக்களுக்கு உணவு!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திண்டிவனம் மார்ச் 4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திண்டிவனத்தில் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களையும், 700க்கும் மேற்பட்டபொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிக ழ்ச்சியை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திண்டிவனம் மேம்பாலம் அருகில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ரமணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பள்ளி மாணவ - மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களையும் 700க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்துசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் ,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,பொதுக் குழு உறுப்பினர் கதிரேசன்,மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன்,நகர துணை செயலாளர்கள் கௌதமன், ரேணுகா,மகளிர் தொண்டர் அணி சிவகாமி,சங்கீதா கௌதமன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி செந்தில்குமார், வழக்கறிஞர் ஆதித்யன்,நகர மன்ற உறுப்பினர்கள் தீபா விக்னேஷ்வர் சிங் பாஸ்கர் ஷபியுல்லா ஷேக் தில்ஷாத் பேகம், நிர்வாகிகள் அன்பழகன்,ஆடிட்டர்பிரகாஷ், மருத்துவர் சடையன், வெங்கடேச பெருமாள், டாக்டர் அசோக் குமார், சூரிய பிரகாஷ், ராஜேஷ் ,வானவில் ரவி, அண்ணாமலைஜெயராஜ், விஜய ராகவன், சரண்ராஜ், நடராஜ், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில்

# சி.என்.அண்ணாதுரை வாக்காளர்களுக்கு நன்றி!

## கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில்

திருவண்ணாமலை, மார்ச். 4- திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி, கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சி.என்.அண்ணாதுரை எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் நேற்று நடைபெற்றது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் உணவு வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர் ந. பரிமளம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் ஆகியோர் கலந்துகொண்டு தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் ஒரே இலக்கு என்று உறுதிமொழி ஏற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் அறுசுவை உணவு வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், மாநில நிர்வாகிகள் பாஸ்கர் சுந்தரம் வெ.அன்புவாணன் ஆர்.டி.இ.உதயசூரியன், மாவட்ட கழக நிர்வாகிகள் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி மு. கதிரவன், எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் பா.செ.குணசேகரன், வெங்கடாஜலபதி, ஒன்றிய கழகச் செயலாளர் கி.வே. ஆனந்தகுமார், பேரூர் கழக செயலாளர் இரா. அறிவழகன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை நேற்று காலை 9 மணியளவில், கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக் குட்பட்ட கீரனூரில் தொடங்கி, வேளானந்தல், செல்லங்குப்பம், அரும்பாக்கம், கலிங்கலேரி, க.பொலக்குணம் உள்ளிட்ட 13 இடங்களில் வாக்காளர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

மாலையில் 4 மணியளவில் வயலூரில் தொடங்கி, ஜமீன் கூடலூர், நீலந்தாங்கல், ஆலூர், ஓலைப்பாடி உள்ளிட்ட 12 இடங்களில் வாக்காளர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

### சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், விவசாயிகள் பயன்பெறும் வகையில்

# சமயபுரத்தில் நாளை தொழில் முனைவோருக்கான முகாம்!

## பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு தகவல்!

திருச்சி, மார்ச் 4 -

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கு ( தொழில் முனைவோருக்காக) பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என். அருண் நேரு அழைப்பு விடுத்துள்ளார்.

சமயபுரத்தில் நாளை (5ந் தேதி) தொழில் முனைவோருக்கான முகாம் நடைபெறுகிறது.

பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையின் படியும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் படியும் , கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என். நேரு வழிகாட்டுதலோடு திருச்சி மாவட்டத்தில் மண்ணச்சநல்லூர், முசிறி, லால்குடி, துறையூர், , மற்றும் பெரம்பலூர், குளித்தலை ஆகிய பகுதிகளில் உள்ள ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் மற்றும் ,சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனம் வளர்ச்சிக்காக மாபெரும் முகாம் நாளை (5ந்தேதி - புதன் கிழமை) காலை 10 மணியளவில் சமயபுரத்தில் உள்ள ரெட்டியார் மஹாலில் நடைபெற உள்ளது

வாழை ஆராய்ச்சி நிறுவனம், தொழில் குழுமங்கள், வங்கியாளர்கள் சிறு, குறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ,துறை அலுவலர்கள், தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைகள் மற்றும் திட்டங்களை விளக்கி கூற உள்ளனர் .

தொழில் முனைவோ ருக்கான அனைத்து விதமான சந்தேகங்கள், மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள், வணிகம் செய்ய வேண்டிய முறை, வங்கிக்கடன் பெற தேவையான ஆவணங்கள், அரசு வழங்கும் சலுகைகள், மானியங்கள் உட்பட அனைத்து சந்தேகங்களுக்கும் முறையான தீர்வுகள் வழங்கப்பட்டு தொழிலில் வெற்றி பெற வழி காட்டப்படும்.

இது மட்டுமன்றி, பல்வேறு அரசுத் துறைகள் தங்கள் துறை சார்ந்த திட்டங்களை காட்சிப்படுத்த உள்ளனர் . வெற்றி பெற்ற தொழில் முனைவோர்கள் தங்களது அனுபவங்களை எடுத்துக் கூறி தேவையான வழிகாட்டுதல்களை கூற இருப்பதால் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், சிறு குறு மட்டும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் , தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கான மாபெரும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு கேட்டுக் கொண்டுள்ளார்.

### இரா.பாலன் தலைமை! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. - வ.பெ.சுரேஷ் முன்னிலை! இராயபுரம் 48வது வட்டத்தில்

# முதல்வர் பிறந்த நாள் மாபெரும் பொதுக்கூட்டம்! வழக்கறிஞர் மதிவதனி சிறப்புரை!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. - ந.மனோகரன் - அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 4-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 48வது வட்ட கிளை கழகம் சார்பில் மார்ச் 1 தமிழ்நாடு முதல்வர் அவர்கள் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (04.03.2025 - செவ்வாய்க்கிழமை), மாலை 6 மணியளவில், சோலையப்பன் தெரு மண்டபம், இம்பாலா ஹோட்டல் அருகில் நடைபெறுகிறது.

இப் பொதுக் கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் இரா. பாலனி தலைமை வகிக்கிறார்.

கு.ரமேஷ், இரா.பொன்முடி, கோ. நித்தியானந்தம், என். ஹயாத்பாஷ, எஸ். தங்கவாசுகி, என். சிவகுமார், ஒய்.எஸ். ரவிச்சந்திரன், சி.சின்னராஜ், பாபா ஜி.சீனுவாசன், கே.குணசேகரன், கு. எல்லன், ஜானகிராமன், சிதம்பரம், ராஜி, வி.எஸ்.ஆர். குமார் கோபி,இ.துரை, இ. குணா, எல்.ராஜா, எம். மோகன், சிவா, விஜி, சுரேஷ், ரகுபதி, சதிஷ்,ரிஸ்வான், தாவூத்பாஷா, மாரி,சேகர், சரத், மனோஜ்குமார், ச. கார்த்தி கேயன் டிபன், செல்வம், மாதவன், செல்வம், ராஜசேகர், லோகேஷ், பாலாஜி, விநாயகம், ஆமோஷ் மார்க்கெட், ஏழுமலை வண்ணை, முருகன், பிரவீன், பன்னீர்செல்வம் ஹரி கிருஷ்ணன், ந.கோபி எலைட், கோ.இளையராஜா, மாலைகடை வேலு, கணேசன், கந்தா, சந்தானம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார் மற்றும் வி.விஜயலஷ்மி, விஜயகுமார், கு. ரமேஷ், இஸ்மாயில், திருஞானம், மதன், மலையம்மாள், ரமேஷ் ரெபின்போ, விஜயகுமார், இரா.பொன்முடி, எஸ்.யுவராஜ் ந.குமார், எம்.ரவி, புகழேந்தி, கொரியர், பி.முருகன் பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், என்.வேதாசஸ் ஆர்.இளையராஜா வி.சுந்தரி க.சாமுண்டீஸ்வரி ந.சூர்யா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் பங்கேற்று நலஉதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தா.இளையஅருணா, ந.மனோகரன், டாக்டர் அ.சுபேர்கான் பி.டி. பாண்டிச்செல்வம், மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், மு.கோபி, க.நாகம்மை, கமலக்கண்ணன், வி.தயாளன், கி.ராஜேந்திரன், நா. சண்முகம், வே. சிவக்குமார், கீதா சுரேஷ், பா. வேளாங்கண்ணி, ஆர்.வி.லட்சுமி வேலு, கட்பீஸ் பி.சோமசுந்தர மூர்த்தி, லயோலா கே. மதன், ஆர்.பொன்இளவரசன், லயன் எம்.தீனதயாளன், லியோ டி.சுரேஷ் ,கார்த்திக் செங்குட்டுவன் , பி.செந்தில்குமார் வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, ஏ.ரமேஷ்பாபு, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், லோ. மோகன், பி.ஜெயலட்சுமி, நா.கஜேந்திரன், ஜி.எஸ். முருகன், க.கலைச்செல்வன், காட்டன் சதீஷ்குமார், கணேஷ் கிருஷ்ணன், க. கோவிந்தராஜ், கண்ணன், க.கோவிந்தசாமி, காணிக்கைநாதன், ந.ம.மகேஷ்குமார், மோ.ரவிக்குமார், சு.சசிதரன், முனுசாமி, த.ரவி, இம்ரான், ராஜேஷ், ஆர்.குருவம்மாள், செந்தில்குமார், ஆ.பாபு, பி.அன்பழகன், மு.ராஜன், என்.அலெக்ஸ்நாதன், எம். பாலாஜி, ஜெய்சங்கர், முகம்மது மொய்தீன், ஏ.அன்வர், எம்.பாலசுப்பிரமணியன், அத்தோ பி.முனுசாமி, வி. குமார், எல்.சீனிவாசன், முரளிதரன், இரா.மெய்யழகன், ந.ம.தினேஷ்குமார், மோகனகுமரன், தரணி, க.ஜெயசீலன், பி.ஷாஜகான், ஆர். பிருந்தா, ஆர்.சரசா, ஆரணி முஸ்தபா, ஆர்.ஸ்ரீராம், ஏ. சாந்தா, என்.அப்துல்மாலிக், இரா.ரவீந்தரன், பிரேம்விஷ்வநாத், மு.ஜானகிராமன், கார்த்திகேயன், ரமேஷ்,பிரவீன்குமார், நவீன், சந்துரு, மோனிஷ், அருண்குமார், குமரன், அஜித்குமார், கோகுல், இம்ரான்ஷெரீப், சதீஷ், சூர்யா, யஷ்வந்த், விஸ்வநாதன், கௌதம், சுகுமார், சரவணன், சதீஷ்குமார், ரோகன், சரண்குமார், ராம்குமார், ரவிசங்கர், சாய் மகேஷ், தேவேந்திரன், திவாகர், சரவணன், பசுபதி, சுரேஷ்,ஸ்டாலின், ஜெயக்குமார், சுப்பிர மணி, திருப்பதி இராயபுரம், மணி, ரஜினி வண்ணை, அசோக், கோபால், இரா.தமிழரசன், நந்தகோபால்,மகாலிங்கம், அசோக், திருநாக்கரசு உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்கின்றனர்.

ந.மணிமாறன், பல்சர் பி.பாலாஜி, பி.அஜய் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய பெருமாள் பட்டு ஊராட்சி சார்பில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி மற்றும் சிலம்பு போட்டி மற்றும் அறுசுவை உணவு வழங்கும் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாநில ஆதிதிராவிட நல குழு செயலாளர் ஆர். கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கி ஏழை எளியவர்களுக்கு உணவு வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதி எஸ். பரமேஸ்வரன், டி.கே.சீனிவாசன், புகழேந்தி, சௌந்தரராஜன், மற்றும் எம்.சக்திவேல், கௌரி கஜேந்திரன், பார்த்தசாரதி, கஜேந்திரன், அருண் கீதன், ஜனார்த்தனன், ராஜா(எ) ஏழுமலை, நடராஜன், ஜெகதீஸ்வரன், துரைராஜ், கெஜா, பத்மநாபன், ராஜசேகர், மேகநாதன், ரமேஷ்பாபு, விஜயகுமார் , ராஜ், சுரேஷ் ,பிரகாஷ் , ராமச்சந்திரன், விக்னேஸ்வரன், கோபி கிருஷ்ணன், பேருஸ், புருஷோத் , ஜெகதீஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்.